### திட்டம் ஒன்று, பாதுகாப்பு - கணவன் மனைவி இருவருக்கும்

ஒரே திட்டத்தின் வாயிலாக இருவருக்கு பாதுகாப்பு இத்திட்டத்தின் தனிச்சிறப்பாகும். திட்ட காலத்தி பிரீமியத்தைச் செலுத்தி கணவன் மனைவி இருவருக்கும் காப்பீடு பெற்று, முதிர்வின் போது காப்புத் தொகையுடன் இலாபத் தொகையும் சேர்த்து பெற்று பயன் பெற வகைசெய்யப்பட்டுள்ளது.

### இறப்புக் காப்பு

துரதிஷ்ட வசமாக இருவரில் யாரேனும் திட்டகாலத்திலேயே இறக்க நேர்ந்தால் ஒரு காப்புத்தொகை உடனடியாக வழங்கப்பட்டு, அதற்குப் பின்னர் வரும் பிரீமியங்களிலிருந்தும் விலக்களிக்கப்படுகிறது. மற்ற முதிர்வு வரை வாழும் பட்சத்தில் முதிர்வுத் தொகை அவருக்கு வழங்கப்படும். இல்லையெனில் இரண்டாமவரின் இறப்புவரை கணக்கில் சேர்ந்த இலாபத் தொகையோடு ஒரு காப்புத் தொகையும் சேர்த்து குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது.

### விபத்துப் பாதுகாப்பு மற்றும் திறனிழப்பு பாதுகாப்பு

ஓர் சிறுதொகையை பிரீமியத்துடன் சேர்த்து செலுத்துவதன் பயனாக இரட்டிப்பு விபத்து காப்பு கிடைக்கிற மொத்த விபத்துக்காப்பு நான்கு மடங்கு காப்பீட்டுத் தொகைக்கு நிகராக கிட்டுகிறது. இதுவும் இப்பாலிசியி சிறப்பாகும். இச்சலுகை பெற அதிகபட்ச வயது வரம்பு 70 ஆகும்.

விபத்து மூலம் யாரேனும் ஒருவருக்கு திறனிழப்பு ஏற்படுமாயின் ஒரு காப்புத் தொகை பத்து வருடங்களுக் சமமாக மாதத் தவணையாக அளிக்கப் படுகிறது. மேலும் 50 சதம் வரை பிரீமிய விலக்கு அளிக்கப் படுகிறது. இருவருக்கும் திறனிழப்பு ஏற்படுமாயின் மொத்த பிரீமியத்திற்கும் விலக்கு அளிக்கப்படுகிறது.

விபத்துப் காப்பு சலுகை பெறுகிறவர்களுக்கு மட்டுமே இது வழங்கப்படும்.

### பணத்திற்கு முழு பாதுகாப்பு

நாம் முதலீடு செய்கின்ற பணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாயின் அது பாதுகாப்பானோர் கைகளில் இருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் எல்.ஐ.சி.யில் முதலீடு செய்கின்ற தொகை நேர்மையான நிர்வாகம் தெளிவான முதலீட்டுக் கொள்கை என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட நிர்வாகத்தின் வசம் இருக்கிறது.

### இலாபத் தொகை மற்றும் இறுதி கூடுதல் இலாபத் தொகை

பிரீமியத்தொகையினை முதலீடு செய்வதன் மூலம் கிட்டும் இலாபத்தை எல்.ஐ.சி நிறுவனம் பாலிசிதாரர்களுக்கு வருடா வருடம் கணக்கிட்டு பகிர்ந்தளிக்கிறது. இந்த இலாபத்தொகை முதிர்வின் போதோ அல்லது அதற்கு முந்தைய இறப்பின் போதோ வழங்கப்படுகிறது.

தவிர 17 வருடங்கள் முடிவடைந்த பாலிசிகளுக்கு இறுதி கூடுதல் இலாபத் தொகையும் வழங்கப்படுகிறது. இது முதிர்வுத் தொகையுடன் சேர்த்து வழங்கப்படும்.

### வருமான வரி சலுகைகள்

**Section 80(C) of IT Act.**

மேற்கூறிய வருமானவரி விதியின் படி காப்பீட்டுக்காக கட்டப்படும் பிரீமியத்தொகைக்கு வருமானவரி விலக்களிக்கப்படுகிறது. நிகர வருவாயில் இப் பாலிசிக்கான பிரீமியத் தொகை நேரடியாக குறைக்கப் படுகிறது. இச்சலுகைக்கான அதிக பட்சமாக உச்ச வரம்பு 1,00,000 ஆகும்.

இந்த சலுகை பாலிசிதாரரின் பெயரிலுள்ள பாலிசிகளுக்கு மட்டுமல்லாமல், மனைவி மற்றும் பிள்ளைகளின் பாலிசிகளுக்கும் பொருந்தும். (மணமான மகள்களின் பெயரில் உள்ள பாலிசிக

**Section 10(10D) of IT Act.**

பாலிசி முதிர்வடையும் போது வழங்கப்படும் முதிர்வுத்தொகை அல்லது இடையில் இறப்பு நேர்ந்தால் வழங்கப்படும் தொகை இவை இரண்டிற்குமே வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது.. அந்த தொகைக்கு வருமானவரி செலுத்த தேவையில்லை. இது காப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு சலுகையாகும்.

**கடன் வசதி**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னர் மிகக்குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறலாம். கடன் பெறுவதற்கான விதிமுறைகள் மிக விரைவாகவும் சுலபமாகவும் பெறும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளன..

**ஒப்புவித்தல்**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னர் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாம் ஆனால் அப்படி விலகும் போது அதுவரை காப்பளித்ததற்கான தொகை குறைக்கப்படும்.

**இதர நன்மைகள்**

எல்.ஐ.சி வீட்டு வசதி மற்றும் நிதி நிறுவனத்தில் கடன் பெறவும் இப்பாலிசி பயன்படுகிறது. சில குறிப்பிட்ட வங்கிகளில் வங்கிக் கடன் பெற இப்பாலிசி உதவும்.

இந்த அறிக்கை, இத்திட்டத்தின் பயன்களை தாங்களுக்கு முழுமையாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நோக்கம் கொண்டது. அதிக படியான அல்லது சட்டரீதியான விளக்கங்கள் பெற பாலிசி பத்திரம் ஒன்றையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.